தின் மூலம் 1980—வரை 500 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்தது. கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தொகையினை 3000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள விலைவாசிப் படி இந்தப் பணம் காணாது என்று சொல்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இதை மனதிலே கொண்டு அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால் 500 ரூபாய்க்கு பதிலாக 3000 ரூபாய் கொடுப்பதாகச் சென்ற பட்ஜெட் டின்போது அறிவித்தார்கள். ஆனால் அந்தத் தொகையினை வழங்குவதற்கு இன்னும் அரசு உத்தரவு வரவில்லை என்று சொல்லி குடியாத்தத்திலே உள்ள ஒரு கூட்டுறவு சங்கத்திலே இறந்துவிட்ட ஒருவருக்கு 500 ரூபாய்தான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இது குறித்து அமைச்சருக்கு எழுதி இருப்பதாகவும் சொன்னார்கள். இது அமைச்சரின் கவனத்திற்கு வந்ததா? அரசு நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1–3–1980-லிருந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இதிலே கையெழுத்து ஆகி நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் இதுசம்பந்தமாக ஏதாவது புகார் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக அது நிவர்த்தி செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம்-வாதம்சேரியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 727. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு கைத்தறி கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் வாதம்சேரியிலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றில் சுமார் 55 ஆயிரம் ரூபாய் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்

(அ) ஆம்.

(ஆ) மேற்படி சங்கத்தின் நிதியிலிருந்து ரூ. 54,953.60 கையாடல் செய்யப்பட்டது. கோவை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் தலைவரவர்களே, கிட்டத்தட்ட 55,000 ரூபாய் அளவுக்கு கையாடல் நடந்திருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கையாடலிலே யார் யார் ஈடுபட்டவர்கள் ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது ? மேலும் இந்தப் பணத்தைத் திரும்பப் பெற்று அதைக் கணக்கிலே வரவு வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர்அவர்களே, இதிலே சம்பந்தப்பட்டிருப்பவர்கள்—எஸ். மந்திராசலம்-பெரியவலம்புரிச்சேரி, ஆர். பாலசுப்பிரமணியம், வேலுசாமி கவுண்டர், பெரியசாமி செட்டியார், திருமலைச்சாமி, ஆர். மந்திராசலம், என். தண்டபாணி ஆகிய ஏழுபேர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதால் நீதிமன்றத்தின் முடிவினை அனுசரித்து நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கையாடலுக்காக கோர்ட்டிலே வழக்கு நடக்கின்றது என்பது ஒருபுறம் இருந்தாலும் கையாடல் செய்யப்பட்ட பணத்தைத் திரும்பப் பெற்று வரவு வைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது. பணத்தைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசின் கடமையல்லவா ? அந்தக் கடமையை நிறைவேற்ற தனியாக ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தினிடத்திலே திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, அரசு வழக்கறிஞரிடத்திலே இதுகுறித்து கருத்து கேட்கப் பட்டிருக்கின்றது. அந்தக் கருத்து வந்தவுடன் இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் ஊழல் நடப்பது சம்பந்தமாகக் கேள்வி வந்திருக்கின்றது. வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பால் சொசைட்டியிலே ஊழல் நடந்தது. அதுசம்பந்தமாக நான் எழுதிக் கொடுத்திருக்கின்றேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் என்னிடத்திலே நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ கேட்க வேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: இப்படி ஊழல் நடந்தது சம்பந்தமாக நான் கொடுத்தபோது......

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னுடைய அறையிலே கொண்டு வந்து கொடுத்தால் நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் கொடுத்த பொழுது **இப்படிச் சொன்னால் அந்தக் குற்றத்தைப் பற்றி யாரிடம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம்தான் சொல்ல வேண்டும். என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். எழுதிக் கொடுங்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். திரு. பூங்காவனம் ** என்று கூறியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்றை எழுப்பியிருக்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மீது நீங்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்னையைப் பற்றி, அவருக்குத் தெரிவித்திருக்கிறோம். பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறைபாட்டின் காரணமாக மணச்சநல்லூரிலே 6-ம் தேதி போராட்டம் நடைபெற்றது குறித்து .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை முடிந்து போய், இப்போது அங்கே மில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அதை எடுக்கவில்லை.

ஆ. சென்னை நகரில் ஆபாசச் சுவரொட்டி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாகவே, சென்னை நகர சுவர்களில் ஆபாசமான, மிகவும் அருவருக்கத்தக்க, நாமெல்லாம் பார்த்து வெட்கப்படக்கூடிய சுவரொட்டி ஒன்று—

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.